செ.வெ.எண்.                                                     நாள்:  27.09.2019

**ஊத்தங்கரை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் கர்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 27.09.2019) துவக்கி வைத்து கர்பிணி தாய்மார்க்கு சீர் வரிசை பொருட்களை வழங்கினார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் கர்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 27.09.2019) துவக்கி வைத்து கர்பிணி தாய்மார்க்கு சீர் வரிசை பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி.நா.மனோரஞ்சிதம்நாகராஜ் அவர்கள் முன்னிலை வகித்தார்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றும் போது:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கர்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது. நமது மாவட்டத்தில் 10 ஒன்றியங்களில் 2000 ஆயிரம் கர்பிணி தாய்மார்களுக்கு சீர் வரிசை மற்றும் 5- வகையான உணவுகள் வழங்கப்படுகிறது.

சீர் வரிசை பொருட்களாக வளையல், மஞ்சள், குங்குமம், உள்ளிட்ட சீர் வரிசை பொருட்கள் சடங்குகள்செய்து வழங்கப்படுகிறது. அத்தோடு மட்டுமல்லாமல் 5- வகையான கலவை சாதம் வழங்கப்படுகிறது. தாய்மார்கள் கரு தரித்தவுடன் அரசு மருத்துவமணைக்கு சென்று பரிசோதனை செய்துக்கொள்ள வேண்டும். அங்கன்வாடி மையத்தில் வழங்கப்படும் ஊட்ட சத்துக்களை உண்டு சுகாதாரம் பற்றி தெரிந்துக்கொள்ள வேண்டும். குழந்தையின் வளர்ச்சி அறிய ஒவ்வொரு மாதமும் அங்கன்வாடி மையத்திற்கு சென்று எடை சரிபார்த்துக்கொள்ள வேண்டும். ரத்த சோகை ஏற்படாமல் இருக்க இரும்பு சத்து மற்றும் போலிக் அமிலம் மாத்திரைகளை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். கர்ப்ப காலத்தில் குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு புரதம், இரும்பு சத்து, கால்சியம், வைட்டமீன் அதிக அளவு தேவைப்படும். இந்த சத்துக்கள் நிறைந்த உணவுகளை தினசரி உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். மேலும் பிரசவ காலத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமணைகளில் சுக பிரசவம் மேற்கொள்ள அரசு மருத்துமணையில் சேர்ந்து பயன்பெற வேண்டும். அரசு வழங்கும் பேறு கால நிதியுதவி ரூ. 18 ஆயிரம் மற்றும் குழந்தை பராமரிப்புக்கு தேவையான 14- வகையான பொருட்கள் வழங்கப்படுகிறது. இந்த திட்டங்களை பெற்று தாயும், சேயும் நலமுடன் வாழ வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் பேசினார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சாமல்பட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு நோயாளிகள் வருகை பதிவேடு, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள், மருந்துகள் இருப்பு, மற்றும் வெளிநோயாளிகள் வருகை குறித்து ஆய்வு செய்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்க தலைவர்கள் திரு. தேவேந்திரன், திரு.வேங்கன், முன்னாள் நில வள வங்கி தலைவர் திரு.சாகுல் அமீது, ஆத்மா தலைவர் திரு.சேட்டுகுமார், புள்ளியில் ஆய்வாளர் திரு.சீனிவாசன், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.பத்மாவதி, மருத்துவர்கள் டாக்டர்.கவின், டாக்டர் கார்த்திகா மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.